செ.வெ.எண்.50 நாள்: 19.12.2020

# தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து வரப்பெற்ற வாக்குப்பதிவு இயந்திரங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து வரப்பெற்ற வாக்குப்பதிவு இயந்திரங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு இன்று (19.12.2020) ஆய்வு செய்தார்.

பின்னர் தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்திற்கு எதிர்வரும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்குப்பதிவு நடத்துவதற்கான வாக்குப்பதிவு இயந்திரம் (Ballet Unit) கட்டுப்பாட்டு கருவி (Contorl Unit), வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரம் (VVPAT) ஆகிய வாக்குபதிவு இயந்திரங்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறுவுறுத்தல்படி நமது மாவட்டத்திற்கு மகாராஷ்டிரா மாநிலம் அகமத்நகர், ஒஸ்மனபாத், பீட் ஆகிய மாவட்டத்தில் இருந்து நமக்கு இங்கே கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் 2500 வாக்குப்பதிவு இயந்திரம், 2410 கட்டுப்பாட்டு கருவி, 2670 வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரம் வரப்பெற்றுள்ளது. இதுமட்டுமல்லாமல் கடந் தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட 700 வாக்குப்பதிவு இயந்திரம், 300 கட்டுப்பாட்டு கருவி, 300 வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரம் ஆகியவை நம்மிடம் உள்ளது. இவை அனைத்தும் காப்பு அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகள் உள்ளது. 1603 வாக்குசாவடிகள் உள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள வாக்குபதிவு இயந்திரங்கள் போதுமானதாகும். தேர்தல் ஆணையத்தின் விதிமுறையின்படி 140 சதவிதம் கட்டுபாட்டு கருவி, 140 சதவிதம் வாக்குபதிவு இயந்திரம் என தேவையான அளவு உள்ளது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தேர்தல் தனி வட்டாட்சியர் திரு.ரகு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சித்தார்த், திருமதி.வசந்தா மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.